முருகப்பெருமான் துணை

**மகான் ஜெய முனிவர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.07.2023, வியாழக்கிழமை

1. தானதரும சக்தி பெருக
தன்னார்வத் தொண்டர்படை
ஞானம் கொண்டு படைக்கவந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அறிவிப்பேன் சோபகிருது மிதுனதிங்கள்
வரங்களென மூவேழுதிகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 21 ம் நாள், 06.07.2023, வியாழக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை ஜெயமுனிவர் யானும்
அருள்மிக்க ஞான உலகம் அமைய
வாசிவென்ற ஞானவான்களாக
வையகமெல்லாம் நிரம்பவே உரைப்பேன்
4. உரைக்கவே ஓங்கார ஞானி
உபதேசம் ஏற்ற மக்கள்
மறை கற்ற பலம் அடைந்து
மரணம் வெல்லும் சக்திமிகு
5. சக்திமிகு ஞானவான்களாவர்
சகலருக்கும் மெய் வழியை
பக்திபட எடுத்துச் சென்று
பாரெல்லாம் பரப்பும் வல்லமை
6. வல்லமை கண்டு சிறப்பர்
வாழுகின்ற காலம் தன்னிலே
இல்லாமை விரட்டும் படியே
இனிதே தருமத்தை கையில் எடுத்து

7. எடுத்துமே தருமம் தனை வளர்த்து
எல்லா வளமும் மக்களடைய
இடர்வெல்லும் சக்தி மிக்க
இறையருள் பெற்றவர்களாக மாறுவர்
8. மாறவே அரங்கன் அவதார
மகத்துவம் உலகமெல்லாம்
அறமாக விளக்கம் செய்து
அனைவரும் உணர்ந்து தெளிந்து
9. தெளிந்து சரணாகதி கொண்டு
தொடர்ந்து வர கலியினில்
அழியாமை பெற்று சிறப்பர்
ஆபத்து ஆயுதகண்டமில்லா
10. கண்டமில்லா இயற்கை வகை
காணவே சகல பாதுகாப்புடன்
தொண்டர்களாக அரங்கன் ஆசிபட
தெரிவிப்பேன் எல்லா வரமும் கண்டு
11. கண்டுமே ஞானவான்களாக
கலியுகம் தன்னை மாற்றி
தொண்டுமிக்க ஞானயுகம் படைப்பர்
தெரிவித்த அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–